Director of Municipal Administration
16 AUG 2010
Chepauk, Chennai-600 005.

## சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்– காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டு குடிநீர்த் திட்டம்– அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது– நிர்வாக ஒப்புதல் வழங்கப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ2) துறை

அரசாணை (நிலை) எண்.164

நாள் 11.8.2010
ஆடி 26 திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டது:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கடித எண்.கோ.250706/உ.பொ.4/திமேபி/2010, நாள்.19.7.2010

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற நிர்வாக ஒப்புதல் வழங்க கோரும் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில், மதுரை மாநகராட்சி மற்றும் அதன் திட்டப் பகுதிகளில் அடங்கியுள்ள, நகரக உள்ளாட்சி அமைப்புகள், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும், காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், திருமங்கலம், அவனியாபுரம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, பரவை, திருநகர், விளாங்குடி, பேரூராட்சிகள் மற்றும் வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்து, அதனடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகாவில் மேட்டு மகாதானபுரத்திற்கு அருகே காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், பரவை, விளாங்குடி, திருநகர், அ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 155 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு

திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. நகரப் பகுதிகளுக்கு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் / சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 225.36 கோடிக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது எனத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், திட்டத்தினை இரண்டு ஆண்டுகளில் 5 சிப்பங்களாக ஐந்து ஆண்டுகள் பராமரிப்பு பணிகளை உள்ளிட்டு, கீழ்க்கண்ட விபரப்படி செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிப்பம். I | தலைமையிடப் பணி, தலைமை பணியிடம் முதல் தோகைமலை வரை நீர் உந்துக் குழாய் பதித்தல் |
| சிப்பம். II | தோகைமலையில் நீரேற்று நிலையம், தோகைமலை முதல் பண்ணான்கொம்பு வரை நீருந்து குழாய் பதித்தல், பண்ணான்கொம்பில் நீரேற்று நிலையம் மற்றும் பண்ணான்கொம்பு முதல் கோட்டையூர் வரை நீர் உந்து குழாய் பதித்தல் |
| சிப்பம். III | i) கோட்டையூர் முதல் சிங்கம்புணரி வரை மற்றும் கோட்டையூர் முதல் மேலூர் வரையிலான 63.735 கி.மீ நீளமுள்ள நீர் கொணரும் குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>ii) மேலூர் மற்றும் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் 726.09 கி.மீ நீளத்திற்கு நீருட்டு குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>iii) மேலூர் நகராட்சிக்கு, அ.வெள்ளாளப்பட்டி மற்றும் சிங்கம்புணரி பேரூராட்சிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் |
| சிப்பம். IV | i) அ.வெள்ளாளப்பட்டி முதல் குமாரம் வரை மற்றும் அ.வெள்ளாளப்பட்டி முதல் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்படவுள்ள தரைமட்ட தொட்டி வரை 94.205 கி.மீ நீளமுள்ள நீர் கொணரும் குழாய் பதித்தல், மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>ii) மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களில் 841.75 கி.மீ நீளத்திற்கு நீருட்டு குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>iii) அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பேரூராட்சிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல் |
| சிப்பம். V | i) குமாரம் முதல் திருமங்கலம் வரையிலான 75.995 கி.மீ நீளமுள்ள நீர் கொணரும் குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>ii) திருப்பரங்குன்றம் மற்றும் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில் 533.47 கி.மீ நீளத்திற்கு நீருட்டு குழாய் பதித்தல் மற்றும் அதனைச் சார்ந்த பிற பணிகளுடன் தரைமட்ட தொட்டி கட்டுதல்.<br>iii) பரவை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகளுக்கு மற்றும் அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்தல். |

4. மேலும், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சிக்கு ரூ.3.473 கோடி மற்றும் மேலூர் நகராட்சிக்கு ரூ.25.19 கோடி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 7 வருடங்களுக்கு தமிழ்நாட்டிற்கான மாநில நிதி ஒதுக்கீட்டுத் தொகை இல்லாததாலும், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டினை திட்டக் குழு உயர்த்தும் பட்சத்தில், புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்ததுடன், மேலூர் நகராட்சிக்கு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவன உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். மேலூர் நகராட்சிக்கு ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன நிதி உதவி கிடைக்காத காரணத்தால் மாற்று நிதி ஆதாரம் நகராட்சி நிர்வாக இயக்குநரால் தற்பொழுது இறுதி செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நகர்புர வளர்ச்சி திட்ட அமைச்சகத்தின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிக்கும் குழு அவனியாபுரம் மற்றும் திருமங்கலம் நகராட்சிகளுக்கும், பரவை, விளாங்குடி, திருநகர் பேரூராட்சிகளுக்கும் ரூ.196.73 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் நிதி பகுப்பு கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 1

பயனாளிகள் வாரியான நிதி ஆதாரம்

ரூபாய் கோடியில்

| வ.எண் | பயனாளிகள் | மதிப்பீட்டுத் தொகை | மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை | மத்திய அரசு + மாநில அரசின் மான்யம் | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்திடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்புத் தொகை | உள்ளாட்சி அமைப்பின் கூடுதல் பங்களிப்புத் தொகை | உள்ளாட்சி அமைப்பின் மொத்த பங்களிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9(7+8) |
| I | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM) | | | | | | | |
| 1 | அவனியாபுரம் நகராட்சி | 60.91 | 60.74 | 33.41 | 9.11 | 18.22 | 0.17 | 18.39 |
| 2 | திருமங்கலம் நகராட்சி | 68.13 | 58.74 | 32.31 | 8.81 | 17.62 | 9.39 | 27.01 |
| 3 | திருநகர் பேரூராட்சி | 15.10 | 18.22 | 9.06 | 1.51 | 4.53 | – | 4.53 |
| 4 | பரவை பேரூராட்சி | 26.14 | 26.78 | 15.684 | 2.614 | 7.842 | – | 7.842 |
| 5 | விளாங்குடி பேரூராட்சி | 30.98 | 32.25 | 18.588 | 3.098 | 9.294 | – | 9.294 |
| II | சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (UIDSSMT) | | | | | | | |
| 1 | அ. வெள்ளாளப் பட்டி பேரூராட்சி | 3.28 | 3.473 | 2.066 | 0.886 | 0.328 | – | 0.328 |

| வ.எண் | பயனாளிகள் | விரிவுதிட்ட தொகை | மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை | மத்திய அரசு + மாநில அரசின் மானியம் | தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி கழகத்திடமிருந்து பெறப்படும் வட்டியில்லா கடன் | உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்புத் தொகை | உள்ளாட்சி அமைப்பின் கூடுதல் பங்களிப்புத் தொகை | உள்ளாட்சி அமைப்பின் மொத்த பங்களிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9(7+8) |
| III | தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி கழகத்தால் புதிய வீட்டிணைப்பிற்கு பெறப்படும் கடன் மற்றும் கட்டமைப்பு செயலுக்கான ஈடு செய்யும் தொகை மூலம் பெறப்படும் மானியம் | | | | | | | |
| 1 | மேலூர் நகராட்சி | 23.80 | – | – | – | 23.80 | | 23.80 |
| IV | குறைந்த பட்ச தேவைத் திட்டம் (80:20) | | ஆரசு மானியம் (80%) | | | பேரூராட்சிகளின் பங்களிப்பு (20%) | | |
| 1 | அலங்கா நல்லூர் பேரூராட்சி | 6.13 | 4.904 | | | 1.226 | | |
| 2 | பாலமேடு பேரூராட்சி | 7.22 | 5,776 | | | 1.444 | | |
| 3 | சிங்கம் புணரி பேரூராட்சி | 15.80 | 12.64 | | | 3.16 | | |
| V | குறைந்த பட்ச தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் | | | | | | | |
| 1 | 1430 ஊரக குடியிருப்புகள் | 477.13 | 477.13<br>குறைந்த பட்ச தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர் திட்டம் மூலம் 100% மானியம் | | | | | |
| VI | வைப்பு நிதி | | | | | | | |
| | தொழிற் சாலைகள் | 49.38 | தொழிற்சாலைகளால் வழங்கப்பட வேண்டும் | | | | | |
| | மொத்தம் | 784.00 | | | | | | |

நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள் மேலூர் நகராட்சிக்கும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வருட வாரியாக நிதி பகுப்பினை கீழ்கண்டவாறு கொடுத்துள்ளார்கள்.

அட்டவணை –2

உள்ளாட்சி அமைப்பின் பங்குத் தொகையினை செலுத்துவதற்கான முறைகள்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | பயனாளிகள் | உள்ளாட்சி அமைப்பின் விகிதாச்சார பங்குத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி கழகத்தால் புதிய மீட்டமைப்பிற்கு பெறப்படும் கடன் | உட்கட்டமைப்பின் ஈடுசெய்யும் நிதியின் மூலம் பெறப்படும் மான்யம் | | | கேளிக்கை வரியின் மூலம் பெறப்படும் மான்யம் | | | மீட்டமைப்பின் மூலம் பெறப்படும் வைப்புத் தொகை | பொது நிதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2010–11 | 2011–12 | 2012–13 | 2010–11 | 2011–12 | 2012–13 | 2011–12 | 2012–13 |
| 1 | மேலூர் நகராட்சி | 23.800 | 4.900 | 6.900 | 6.000 | 6.000 | – | – | – | | |
| | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM) / சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைபு வளர்ச்சி திட்டம் (UIDSSMT) ஆகிய திட்டங்களின் கீழ் நிதியாதாரம் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் | | | | | | | | | | |
| 2 | அவனியாபுரம் நகராட்சி | 18.390 | 5.750 | – | – | – | 2.640 | 5.000 | 5.000 | | |
| 3 | திருமங்கலம் நகராட்சி | 27.010 | 5.600 | 5.410 | 8.000 | 8.000 | – | – | – | | |
| 4 | திருநகர் பேரூராட்சி | 4.530 | – | – | – | 2.530 | – | 1.000 | 1.000 | | |
| 5 | பரவை பேரூராட்சி | 7.842 | 0.200 | – | 3.000 | 3.642 | – | – | 1.000 | | |
| 6 | விளாங்குடி பேரூராட்சி | 9.294 | – | – | 2.500 | 2.544 | – | 2.000 | 2.250 | | |
| 7 | அ.வெள்ளாளப் பட்டி பேரூராட்சி | 0.326 | – | 0.326 | – | – | – | – | – | | |
| | குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் நிதியாதாரம் பெறும் உள்ளாட்சி அமைப்புகள் | | | | | | | | | | |
| 8 | அலங்கா நல்லூர் பேரூராட்சி | 1.226 | – | – | 0.500 | – | – | 0.470 | 0.056 | 0.200 | – |
| 9 | பாலமேடு பேரூராட்சி | 1.444 | – | 0.500 | – | – | – | 0.904 | – | 0.040 | – |
| 10 | சிங்கம்புணரி பேரூராட்சி | 3.160 | – | 0.500 | 1.000 | – | 0.500 | – | 0.500 | 0.418 | 0.242 |

5. மேலும், 17.04.2010 அன்று நடைபெற்ற அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுக் கூட்டத்தில் 1,430 ஊரகக் குடியிருப்புகளுக்கு குறைந்த பட்ச தேவைத் திட்டத்தில் தேவைப்படும் ரூ.491.29 கோடியினை நபார்டு வங்கி / தேசிய ஊரகக் குடிநீர் திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதியுதவி பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது. நபார்டு வங்கியில் கடனுதவி பெற மாநில அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நிதித் துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்றும் திட்டத்தினை மாற்றி அமைத்ததன் காரணமாக விகிதாச்சார தொகை ரூ.491.29 கோடியிலிருந்து தற்போது ரூ.477.13 கோடி குறைந்துள்ளது. இதனை குறைந்த பட்ச தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அட்டவணை – 3

குறைந்த பட்ச தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆண்டு வாரியான நிதி தேவை

(ரூபாய் கோடியில்)

| வ. எ.ண் | மான்ய விவரம் | ஊரகக் கூறுகளுக்கான நிதி தேவை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 2010-11 | 2011-12 | 2012-13 | |
| 1 | குறைந்த பட்ச தேவைத் திட்டம் (மாநில அரசு) (ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 3 பேரூராட்சிகள்) | 31.15 | 155.72 | 124.58 | 311.45 |
| 2 | தேசிய ஊரக குடிநீர் திட்டம் (மத்திய அரசு) (ஊரகக் குடியிருப்புகள்) | 18.90 | 94.50 | 75.60 | 189.00 |
| | மொத்தம் | 50.05 | 250.22 | 200.18 | 500.45 |

இத்திட்டத்தில் நாளொன்றுக்கு 8.97 மில்லியன் லிட்டர் கீழ்கண்ட தொழிற்சாலைகளுக்கு / கல்வி நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/s. சுந்தரேசுவரர் அலாய் மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் | நாளொன்றுக்கு 5 மில்லியன் லிட்டர் |
| 2 | சென்ட்ரல் இன்ஸ்டிட்யூட் ஆப் பிளாஸ்டிக் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி (CIPET) | நாளொன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் |
| 3 | நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் பார்மாசூட்டிகல் கல்வி மற்றும் ஆராய்ச்சி (NIPER) | நாளொன்றுக்கு 1.97 மில்லியன் லிட்டர் |

6. இதனடிப்படையில், இத்திட்டத்தினை 14.7.2010 அன்று நடைபெற்ற அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுக்கூட்டத்தில் வைக்கப்பட்டு அதிகாரம் அளிக்கப் பெற்ற குழு தனது தீர்மான எண்.3 நாள் 14.7.2010ல்

1) காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, மதுரை மாவட்டத்தில் மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 1,430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.784.00 கோடி அமைப்புச் செலவு எனவும், ரூ.15.60 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவு எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.6,048/ எனவும் 1,000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.19.50 எனவும் கணக்கிடப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும் ;

2) அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ள நிதியாதாரத்தின்படியும், அட்டவணை 2ல் குறிப்பிட்டுள்ள உள்ளாட்சி அமைப்பின் பங்குத் தொகையினை அளிக்கும் முறைகளுடனும் திட்டத்தை செயல்படுத்தவும் அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும் ;

3) (i) ஊரகக் குடியிருப்புகளுக்கான ரூ.477.13 கோடியினை குறைந்த பட்ச தேவைத் திட்டம் மற்றும் தேசிய ஊரகக் குடிநீர்திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும் ;

(ii) அலங்காநல்லூர், பாலமேடு மற்றும் சிங்கம்புணரி பேரூராட்சிகளுக்கான ரூ.29.15 கோடியினை குறைந்த பட்ச தேவைத் திட்டத்தின் கீழ் 80:20 அடிப்படையில் (80% மாநில அரசு மான்யம் மற்றும் 20% உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு) செயல்படுத்தவும், அரசுக்குப் பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும்

4) (i) முதல் 5 வருட பராமரிப்பினை திட்டத்தினை செயலாக்கம் செய்த ஒப்பந்தக்காரரே தன்னுடைய சிப்பங்களை பராமரிக்க, அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும்;

(ii) இதற்காகும் செலவினம் ரூ.78.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறவும், மின் கட்டண உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, விலையேற்றம் முதலியவற்றை கருத்தில் கொண்டு, பயனாளிகளிடமிருந்து பெறும் குடிநீர் கட்டணத்திற்கும், பராமரிப்புத் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையினை அரசு மான்யமாக பெறவும் அரசுக்குப் பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும் ;

5) பணி செயலாக்கம் செய்ய ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 2 வருடங்களில் திட்டத்தினை கீழ்க்கண்ட 5 சிப்பங்களாக செயல்படுத்தவும், பத்தி 4ல் கூறியபடி முதல் 5 வருடங்களுக்கு பராமரிப்பினை 5 சிப்பங்களாக பராமரிப்பு செய்யவும் அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும்;

6) தொழிற்சாலைகளுக்கு, நாளொன்றுக்கு 8.97 மில்லியன் லிட்டர் ஒதுக்கீட்டுடன், ரூ.49.38 கோடி வைப்பு நிதியாக பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்தவும், தொழிற்சாலை / மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிடமிருந்து விகிதாச்சார அமைப்பு செலவினை குடிநீர் விநியோகம் செய்யும் போது பெறவும் அரசுக்குப் பரிந்துரை செய்து தீர்மானித்தது என்றும்,

- மேலும், இதுபோன்ற மிகப்பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, தகவல் அறிதல் மற்றும் கண்காணித்து கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப கட்டமைப்பு (SCADA) மிகவும் அவசியம் என வலியுறுத்தியதோடு, மாநில திட்டக் குழுவின் பகுதி-II திட்ட மான்யத்தில் நிதி உதவி பெற்று நிறுவ அறிவுறுத்தியது என்றும், அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் தீர்மானம் 1, 2, 3, 5 ன்படி, மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், ஆ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.784.00 கோடி அமைப்புச் செலவு எனவும், ரூ.15.60 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவு எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.6,046/- எனவும், 1,000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.19.50 எனவும் தீர்மானத்திலுள்ள நிதியாதாரத்துடன், 5 சிப்பங்களாக செயல்படுத்தவும் திட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. மேலும், அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் தீர்மானம் 4 ன்படி, முதல் 5 வருட பராமரிப்பினை, திட்டத்தினை செயலாக்கம் செய்த ஒப்பந்தக்காரரே தன்னுடைய சிப்பங்களை பராமரிக்கவும், மின் கட்டண உயர்வு, குடிநீர் கட்டண உயர்வு, விலையேற்றம் முதலியவற்றை கருத்தில் கொண்டு, பயனாளிகளிடமிருந்து பெறும் குடிநீர் கட்டணத்திற்கும், பராமரிப்புத் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையினை அரசு மான்யமாக பெறவும் உரிய உத்தரவு வழங்கும்படியும், இத்திட்டத்திற்கான 5 வருட பராமரிப்பு செலவினம் ரூ.78.00 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று தரும்படியும் அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் தீர்மானம் 6 ன்படி, தொழிற்சாலைகளுக்கு, நாளொன்றுக்கு 8.97 மில்லியன் லிட்டர் ஒதுக்கீட்டுடன், ரூ.49.38 கோடி வைப்பு நிதியாக பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்தவும், தொழிற்சாலை/மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிடமிருந்து விகிதாச்சார அமைப்பு செலவினை குடிநீர் விநியோகம் செய்யும் போது பெறவும் உரிய ஆணை வழங்கும்படியும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், இக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, தகவல் அறிதல் மற்றும் கண்காணித்து கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப கட்டமைப்பு (SCADA), மாநில திட்டக் குழுவின் பகுதி-II திட்ட மான்யத்தில் நிதி உதவி பெற்று நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

8. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்று, மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், ஆ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,430 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த்

திட்டத்திற்கு ரூ.784.00 கோடி அமைப்புச் செலவு எனவும், ரூ.15.60 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவு எனவும், தனி நபர் செலவு விகிதம் ரூ.6,046/- எனவும், 1,000 லிட்டருக்கான குடிநீர் செலவு ரூ.19.50 எனவும் தீர்மானத்திலுள்ள நிதிபாதாரத்துடன், 5 சிப்பங்களாக செயல்படுத்தவும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம், உள்ளாட்சி அமைப்பின் பங்குத் தொகை, குறைந்தபட்ச தேவைத் திட்டம் / தேசிய ஊரக குடிநீர் திட்டங்களின்கீழ் மான்யம் பெற்று, இத்திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை—5
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை—5
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை—108
ஊரக வளர்ச்சி இயக்குநர், பனகல் கட்டிடம்,
சைதாப்பேட்டை, சென்னை—15
மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம்
சம்பந்தபட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலமாக)
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலரின் தனிச்செயலர்,
சென்னை—9
நிதி (நநிமகுவ) துறை, சென்னை—9
(குவ.1, குவ.3,குவ.4, அமுந.2) துறை, சென்னை—9
இகோ/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
11/8/10